தெவிநுவர பிரதேச சபை - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெவிநுவர பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தெவிநுவர பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள்,

பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களுக்கு மாத்திரம் அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளகக் கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை சபையினால் பேணிச் செல்லல் அவசியமாகவுள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு உறுதிச்சீட்டு, கொடுப்பனவு உறுதிச்சீட்டு, ஆகிய பிரதான கணக்கீட்டு அறிக்கைகள் பேணிச் செல்லல் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உட்படுத்தப்பட்டுள்ளது.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கட்டிட நிர்மாண வேலையின் கூட்டுப்பெறுமதி ரூபா 7.39 மில்லியன் தொகை நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த 11 காணிகளின் பெறுமதி காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.	காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் காட்டப்பட்டிருக்காத அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை மூலதனப்படுத்துவதற்கும் அந்த அட்டவணையை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்ட 11 காணிகளின் பெறுமதியை காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	முன்னைய ஆண்டில் பண்டக் கணிப்பீட்டின் படி அகற்றப்பட வேண்டியவை என 10 இனங்கண்டிருந்த இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கிரயத்தை அறுதியாக இனங்காணாமல் ரூபா 0.43 மில்லியன் தொகை 2018 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு காணபட்ட இனங்காணப்படாத மீதியிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.	நிரந்தர விடய உத்தியோகத்தரின் மூலம் அந்த அலுவல்களை விரைவாக நிறைவேற்றிக்கொண்டு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வழுவினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	அகற்றப்பட்ட வேண்டும் என இனங்காணப்பட்ட 10 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கிரயத்தை அறுதியாக இனங்கண்டு ஏடுகளிலிருந்து அகற்றப்பட வேண்டும்.
(இ)	முன்னைய ஆண்டின் போது இனங்காணப்படாத தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் மீதியில் பண்டக் கணிப்பீட்டின் மூலம் அப்புறப்படுத்தப்பட்ட பண்டங்களின் பெறுமதியை அறுதியாக இனங்காணாமல் ரூபா 0.10 மில்லியனிற்கான பெறுமதியொன்று 2018 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு இனங்காணப்படாத மீதியில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.	நிரந்தர விடய உத்தியோகத்தரின் மூலம் அந்த அலுவல்களை விரைவாக நிறைவேற்றிக்கொண்டு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வழுவினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	அகற்றப்பட்ட வேண்டும் என இனங்காணப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கிரயத்தை அறுதியாக இனங்கண்டு ஏடுகளிலிருந்து அகற்றப்பட வேண்டும்.

1.6.3 கணகக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
காணிகள் மற்றும் கட்டிடங்கள் பதிவேடு, விரிவான அட்டவணை, உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு, பொருட் பதிவேடு ஆகிய எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 108.87 மில்லியன் தொகைக்கான 04 கணக்கு விடய மீதிகளை திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியவில்லை.	அட்டவணைகள் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மீதிகளை உறுதிப்படுத்தும் நிலையான சொத்துக்கள் பதிவேடு, விரிவான அட்டவணை, பொருட் பதிவேடு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 இணங்காமை

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணங்கள் 139 மற்றும் 387	2024 செப்தம்பர் 30 திகதியில் உள்ளவாறு நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட மீதி ரூபா 1.24 மில்லியன் எனினும், அதனை கவனம் செலுத்தாமல், ரூபா 4.01 மில்லியன் பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டிருந்தது.	தவறுதலாக ஏற்பட்டதெனவும், எதிர் காலத்தில் அவ்வாறு ஏற்படாமல் இருக்க பொறுப்பாக இருப்பேன் எனவும்.	நடைமுறைக் கணக்கில் காணப்படும் மீதியை மிகைத்து காசோலைகள் வழங்குதல் தொடர்பான விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தருக்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 35.96 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 31.49 மில்லியன் தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	வருமான மூலம்	2024				2023			
		மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
(i)	வீதவரி மற்றும் வரி	3,302,179	2,642,326	3,055,760	5,793,704	3,585,236	2,887,132	2,733,790	6,207,138
(ii)	வாடகை	28,574,200	32,882,656	35,490,582	10,094,515	26,595,120	28,887,419	30,825,118	12,702,441
(iii)	அனுமதிப் பத்திரக் கட்டணம்	4,001,200	3,746,556	3,699,056	121,250	3,399,900	4,184,864	4,160,404	73,750
(iv)	ஏனைய வருமானங்கள்	13,807,714	10,419,022	10,303,640	3,582,838	16,410,800	10,744,038	7,793,138	3,467,456
		49,685,293	49,690,560	52,549,038	19,592,307	49,991,056	46,703,453	45,512,450	22,450,785

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) வீதவரியும் வரியும்		
(i) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 6.02 மில்லியனிற்கான நிலுவை வீதவரி மீதியில் ரூபா 1.38 மில்லியன் தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. தொடர்ந்தும் அறவீடு செய்யப்பட வேண்டிய நிலுவை வீதவரி மீதியில் ரூபா 4.18 மில்லியன் தொகை 05 வருடங்களை மிகைத்திருந்தது.	நிலுவையை அறவீடு செய்வதற்காக நடமாடும் நிகழச்சித் திட்டமொன்று செயற்படுத்துதல், வீட்டுக்கு வீடு செல்லும் நிகழ்ச்சித் திட்டங்கள், விளம்பர நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், சிவப்பு அறிவித்தல்கள் வழங்கப்பட்டு நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.

(ii)	1946 இன் 30 ஆம் இலக்க வரி மற்றும் பெறுமதி மதிப்பீட்டுக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20 இன் பிரகாரம் வீதவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு வருடாந்த பெறுமதியின் மீது வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 07 பிரிவுகளில் 3300 வீதவரி அலகுகளுக்குரிய ஆதனங்கள் 2011 ஆண்டின் பின்னர் பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை.	2025 ஜனவரி 15 திகதி தெவிநுவர பிரதேச சபை புதிய பெறுமதி மதிப்பீட்டு திருத்தம் மேற்கொள்ளப்பட்டது என.	வரி மற்றும் பெறுமதி மதிப்பீட்டுக் கட்டளைச் சட்டத்தின் படி வீதவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடு செய்ய வேண்டும்.
(iii)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 134(1) இன் பிரகாரம் 16 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என இனங்காணப்பட்டு 2016 ஆகஸ்ட் 12 திகதிய 1980 இலக்கம் கொண்ட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டிருந்த போதிலும், அந்த ஆதனங்களை இனங்கண்டு பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2016 ஆண்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த வர்த்தமானியில் குறைபாடுகள் காணப்படுகின்றதென அறிவித்து உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்தக் குறைபாடுகளை சரி செய்வதற்காக தேவையான எல்லை நிர்மாணித்தல் வரைபுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது.	இனங்காணப்பட்ட முன்னேற்றப்பட்ட பிரதேசங்களுக்காக வீதவரி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iv)	மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 77,249 தொகைக்கான நிலுவை ஏக்கர் வரி மீதியில் எதுவிதத் தொகையும் மீளாய்வாண்டில் அறவீடு செய்திருக்கவில்லை.	2024 ஆண்டின் போது புதிய ஏக்கர் வரி கணிப்பீட்டுக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்ட போதிலும், எதுவித முன்னேற்றமும் அறிவிக்கப்பட்டுள்ளது என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.

(ஆ) வாடகை

(i)	இயந்திரங்களை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் சபைக்கு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட 05 வருடங்களை மிகைத்திருந்த ரூபா 0.15 மில்லியனிற்கான வாடகைத் தொகை அறவீடு செய்தல் தொடர்பாக சட்ட நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.	உதவி உள்ளூராட்சி ஆணையாளரினால் நியமனம் செய்யப்பட்ட குழுவின் பரிந்துரை உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	வியாபார நிலையங்களை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 11.62 மில்லியனிற்கான மீதியில் ரூபா	ரூபா 100,000 தொகையை விட மிகையாக நிலுவை காணப்பட்ட 02 கடையறைகளில் ரூபா 37,640 தொகை வீதம்	நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	1.54 மில்லியன் தொகை 02 வருடங்களுக்கும் 05 இற்கும் இடைப்பட்ட மற்றும் ரூபா 5.05 மில்லியன் தொகை 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படுகின்ற மீதியொன்றாக காணப்பட்ட போதிலும், நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு சட்டச் செயற்பாடுகள் மேற்கொள்வதில் தாமதம் அடைந்து காணப்பட்டது.	தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.	
(iii)	மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 0.83 மில்லியனிற்காக நிலுவை வாடகை வருமானத்தில் மீளாய்வாண்டின் போது எதுவித தொகையும் அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கவில்லை.	பல வருட காலமாக காணப்படும் மீதியொன்றாகும் என.	நிலுவை வருமானங்களை விரைவாக அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iv)	தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகோ/2010/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 5 இன் படி வாடகையாளர்களிடம் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கை 03 வருடங்களுக்கு ஒருமுறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளாமல் சபைக்கு சொந்தமான 07 வர்த்தக தொடர் கட்டிடங்களில் 76 கடையறைகளின் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்தது.	சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளது என.	சுற்றறிக்கை அறிவுரையின் படி உடன்படிக்கை காலவதியான கடையறைகளுக்காக விரைவாக உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற உக்கக்கூடிய குப்பைகளை பயன்படுத்தி சேதனப்	உக்கக்கூடிய குப்பைகளை வெல்லமடம மோலவத்த எனும் அரசாங்க காணியில்	குப்பை முகாத்துவத்திற்கான முறையான

பசளை உற்பத்தி செய்யும் அலுவல்கள் மற்றும் உக்காத குப்பைகளை மீள்சுழற்சி செய்வதற்கு முறையான வேலைத் திட்டமொன்று செயற்படுத்தப்படாமல், சேகரிக்கப்படுகின்ற உக்காத குப்பைகளை முறையான செய்முறை ஒன்றின்றி வெல்லமடம மோலவத்த எனும் காணியில் குவிக்கப்படுவதனால் பிரதேசத்தில் தொற்றுநோய் பரவும் ஆபத்து நிலைமையொன்று காணப்பட்டது.	குவிக்கப்பட்ட மண் போட்டு மூடப்படுகின்றதெனவும் மற்றும் உக்காத குப்பைகள் என சுத்தமான பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக் சேகரிக்கப்பட்டு வாகன செயற்களத்தில் புதிய கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு மீள்சுழற்சி நிலையத்திற்கு அனுப்பும் வரை களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன என.	வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டும்.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2019 ஆண்டு வெல்லமடம பிரதேசத்தில் விபத்துக்குள்ளாகியிருந்த பெக்கோ இயந்திரம் தொடர்பாக ரூபா 170,000 தொகைக்கான நட்டம் நிதிப் பிரமாணம் 104(4) அறிக்கையின் படி பொறுப்பான தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கந்தறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று குறிப்பிட்ட தரப்பினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டது எனவும், முறைப்பாட்டுக்கு எதிராக முன்னைய தலைவரினால் உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு மேற்கொள்ளப்பட்ட எழுத்துமூல கோறிக்கையின் படி விரிவான அறிக்கையொன்று உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டது என.	நட்டத்தை விரைவாக பொறுப்பான தரப்பினரிடம் அறவீடு செய்ய வேண்டும்.
(ஆ)	சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வீதி விளக்கு பராமரிப்பு அலுவல்களுக்காக 2024 மே முதல் செப்தம்பர் வரையான வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்த லொறி வண்டி ஒன்றிக்காக ரூபா 0.51 மில்லியனிற்கான வாடகை செலுத்தப்பட்டிருந்ததுடன், மாதாந்தம் உடபடிக்கை புதுப்பிக்கப்பட்டிருக்காமையால் ஒரு நாளைக்கு ரூபா 3,400 தொகை வீதம் கொடுப்பனவு செய்திருந்த போதிலும், ஓட்டப்பட்ட தூரத்தின் எண்ணிக்கை மற்றும் நிறைவேற்றப்பட்ட கடமை தொடர்பாக மேற்பார்வை	ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமையின் காரணமாக மீண்டும் கூறுவிலை அழைப்பதற்கு காலம் ஒன்று காணப்படாமையால் டென்டர் பெட்டியில் போடப்பட்ட கூறுவிலை ஏற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதெனவும், இனிமேல், இவ்வாறான தவறுகளை தடுத்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், சுட்டிக்காட்டியவாறு உடன்படிக்கை மாதாந்தம் நாளதுவரை ஆக்கப்படவில்லை என	தேவைப்பாடு தொடர்பாக விபரக் குறிப்புக்கள் குறிப்பிடப்பட வேண்டியதுடன், மாதாந்தம் உடன்படிக்கை நாளதுவரை ஆக்கப்பட வேண்டும்.

	உத்தியோகத்தர் ஒருவரினால் பரிந்துரைக்கப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என.	
(இ)	சபையினால் ஆவணப்படுத்தியிருந்த ஆனால் இனங்காணப்படாத 05 காணித் துண்டுகள், சபையினால் பயன்படுத்தப்பட்ட போதிலும், சாட்டுதல் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படாத 14 காணித் துண்டுகள் மற்றும் உருத்துறுதி காணப்படாத 12 காணித் துண்டுகளை தீர்த்துக்கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உரித்தாக்கப்படாத காணிகளின் அனுபவித்தலை மற்றும் உரிமையை கண்டறிந்து நிலஅளவை அலுவல்கள் மேற்கொள்வதற்காக இணக்கப்பாடு வழங்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளது என.	இனங்காணப்படாத காணிகளை தீர்த்துக்கொள்வதற்கும் உருத்துறுதி இன்றிய காணிகளின் உரிமைச் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும், சாட்டுதல் சான்றிதழ்கள் காணப்படாத காணிகளுக்காக சாட்டுதல் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டின் எசல கொண்டாட்டத்திற்காக தெவிநுவர வியாபார சமூகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த 176 கடைகள் மற்றும் நில சதுரங்களில் 166 இற்கு ஆளுனரின் எழுத்துமூல அங்கீகாரம் இன்றி விலைகூறல் தொகையில் 05 சதவீத கழிவொன்றின் கீழ் வழங்கப்பட்டிருந்தமையால் சபை நிதியத்திற்கு ரூபா 212,790 தொகைக்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. அதேபோல், ஆளுனரின் பூர்வாங்க அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் எசல கொண்டாட்டத்தின் பதவியணியினருக்காக சம்பள முற்பணம் வழங்குதற்கு ரூபா 900,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.	பிரதேச சபை நிதியத்திற்கு கூடிய இலாபமொன்று பெற்றுக்கொள்ளும் குறிக்கோளுடன் அப்போதைய உள்ளூராட்சி உதவியாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் ஒத்துழைப்புடன் கடைகள் மற்றும் தரைச் சதுரங்கள் பெறுகை செய்முறை ஒன்றின் கீழ் விற்பனை செய்வதற்காக முதல் தடவையாக தயாரிக்கப்பட்டிருந்ததெனவும் மற்றும் அப்போது காணப்பட்ட சபைகளினால் முன்மொழிவு மற்றும் அங்கீகரிக்காததுடன், மேற்கொள்ளப்பட்டிருந்தெனவும்.	ஆளுனரின் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவுடன், அவ்வாறன்றேல் பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் அந்த நட்டத்தை அறவீடு செய்ய வேண்டும்.

3.3 சர்ச்சைக்குரிய தன்மையுடைய கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
குறைந்த வருமானமுடைய குடும்பங்களின் பிள்ளைகளுக்கு வழங்குவதற்காக 20,200 புத்தகங்கள் பெற்றுக்கொள்வதற்காக முன்னைய ஆண்டின் போது ரூபா 4.7 மில்லியனிற்கான இன்வொயிஸ் ஒன்று வழங்கப்பட்டிருந்ததுடன், இதற்காக	சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், இந்த விடயம் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் வரை சபையினால் புத்தகங்கள் வழங்குவது தொடர்பாக எதுவித	நிதி மற்றும் நிருவாக விதி, அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், சட்டச்

கூறுவிலைகள் அழைத்தல் 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 207 மற்றும் 208 மற்றும் 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக செயற்பட்டிருந்தது. நலன் பெறுவோரை அறுதியாக இனங்கண்டிருக்காத போதிலும், 2023 பெப்ரவரி 06 திகதி அளவில் புத்தகங்களுக்கான கட்டளையிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியளவிலும் நலன் பெறுவோருக்கு வினியோகிக்கப்படாமல் பெற்றுக்கொள்ளப்பட்ட புத்தகங்கள் களஞ்சியத்தில் காணப்பட்டது. அதேபோல், அந்தப் புத்தகங்களின் GSM பெறுமதி 56 ஆக காணப்பட வேண்டியிருந்த போதிலும், புத்தகமொன்றின் GSM பெறுமதி 55 ஆக காணப்பட்டது. புத்தகங்கள் அச்சிடுவதற்காக பணம் செலுத்தாமையால் தனியார் கம்பனியினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.	கொடுப்பனவும் மேற்கொள்ளக்கூடாது என அறிவிக்கப்பட்டிருந்தது எனவும். இதன் காரணமாக கொடுப்பனவு தொடர்பாக மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை எனவும்.	செயற்பாடுகள் முடிவடையும் வரை கொடுப்பனவு நிறுத்தப்பட வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபைக்குச் சொந்தமான கந்தறை பழைய நூலகக் கட்டிடம் மற்றும் தெவ்சிரிகம சனசமூக நிலையக் கட்டிடம் என்பன விளைவற்றுக் காணப்பட்டதுடன், அவற்றை வருமானம் உழைக்கக்கூடிய ஆக்கபூர்மான கருமங்களுக்கு பயன்படுத்துவற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	சபைக்குச் சொந்தமான பழைய நூலகக் கட்டிடம் மற்றும் தெவ்சிரிகம சனசமூக நிலையக் கட்டிடம் விளைவற்று காணப்படுவதற்கான காரணம் பாழலடைந்திருத்தலே ஆகும்.	பரிசோதனை மேற்கொண்டு ஆக்கபூர்வமான கருமங்களுக்கு பயன்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.5 செய்பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
உள்ளூராட்சி நிறுவனங்களினால் பொதுமக்களுக்கு வழங்குகின்ற சேவைகளை இலகுவாக்குதல், செயற்திறனுடன் மேற்கொள்ளல்	LGPMS மென்பொருள் செயற்படுத்துவதற்காக தரவுகள் உள்ளீடு செய்யப்படுகின்றன என.	சுற்றறிக்கையின் படி நிகழ்வு நிலையின் செய்முறை குறிப்பிட்ட காலப் பகுதியினுள்

மற்றும் வருமானங்களை விரைவாக சேகரிப்பதற்காக நிகழ்வு நிலைமை அறிமுகப்படுத்தல் கட்டாயமாகும் என பொது நிருவாக உள்நாட்டு விவகார அமைச்சுச் செயலாளரினால் 2022 திசெம்பர் 15 திகதிய 2021/01 இலக்கம் கொண்ட உள்ளூராட்சி சுற்றறிக்கையின் மூலம் அறிவித்திருந்த போதிலும், சபையினால் அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை.		நிறுவப்பட வேண்டும்.

3.6 ஒப்பந்த நிறுவாகம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
தெவிநுவர துறைமுக வீதியை தார் பரப்பி அபிவிருத்தி செய்வதற்காக 2023 ஆண்டின் போது ரூபா 01 மில்லியனிற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், பாதையின் 08 இடங்களில் பரப்பப்பட்டிருந்த தார் அகன்று சென்றிருந்தது.	தற்போது மறுசீரமைக்கப்பட்டுள்ளது என.	செயற்திட்டம் உரிய நியமத்தின் படி நிறைவேற்றாமை தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.7 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஆளனித் திட்டத்தின் படி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையின் 31 பதவிகள் மிகையாக காணப்பட்டது.	பதவிகளை அங்கீகரித்துக்கொள்வதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என.	பதவியணியின் மிகை தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	**ஊழியர் கடன்**		
	சபையில் கடமையாற்றிய சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் ஓய்வு பெற்றுள்ள இரண்டு ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை 306,137 இற்கான கடன் மீதிகள் 02 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் அறவிடப்பட்டிருக்காததுடன், மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நிதிக் குழுவின் தீர்மானத்தின் படி சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது என.	விரைவாக சட்ட அலுவல்கள் மேற்கொண்டு கடன்மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.